# குற்றவாளிகளைப் பிடித்துவிட்டோம் என்பது சாதனையல்ல! குற்றங்கள் நடக்காமல் தடுத்துவிட்டோம் என்பதுதான் சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

காவல்துறையை மேம்படுத்துவதற்காக காவலர்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்துதரவும் முதன்முதலாக காவல் ஆணையம் அமைத்ததுடன், அதிகமான எண்ணிக்கையில் காவல் ஆணையங்களை அமைத்து, பல்வேறு முன்னோடி நலத்திட்டங்களை நிறைவேற்றியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

### புதிதாக காவல்துறைக்கு தேர்வு செய்த கழக அரசு!

கடந்த மூன்று ஆண்டுகளில் காவலர்கள் முதல் டி.எஸ்.பி., வரை 17 ஆயிரத்து 435 நபர்களை காவல்துறையிலும், ஆயிரத்து 252 பேரை தீயணைப்புத் துறையிலும், 366 பேரை சிறைத் துறையிலும் புதிதாக நியமித்திருக்கிறோம்! அவர்களும் பாராட்டும் வகையில், சிறப்பாக பணியாற்றி கொண்டு இருக்கிறார்கள்.

மக்களை காக்க வரும் காவல்துறையினரை காக்கும், நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்கள் சிலவற்றை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் தலைமைக் காவலர் வரையிலான ஆளிநர்களுக்கு வாரத்தில் ஒருநாள் விடுமுறை,

காவல் உதவி ஆய்வாளர்களுக்கு, 15 நாட்களுக்கு ஒருமுறை விடுமுறை,

இடர்ப்படி ஆயிரம் ரூபாயாக உயர்வு,

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றும் மாநில நுண்ணறிவுப்பிரிவு, குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றப்பிரிவு, கடலோரக் காவல்படை, இரயில்வே காவல் படை, காவலர் பயிற்சிப் பள்ளி, தாம்

## உலகளவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு காவல்துறை!

பரம் மற்றும் ஆவடி மாநகரங்களில் பணிபுரியும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை மாதந்தோறும் உணவுப்படி, காவலர்களின்வாழ்க்கைத்துணைவியருக்கும் மருத்துவப் பரிசோதனை, இரவு ரோந்து பணிக்கு செல்லும் அதிகாரிகளுக்கு சிறப்புபடி, காப்பீட்டுத் தொகை இரண்டு மடங்காக உயர்வு, மன அழுத்தம் போக்க 'மகிழ்ச்சி' திட்டம், பெண் காவலர்கள் வேலை மற்றும் வாழ்க்கை ஆகியவற்றில் சமநிலை பேண பயிற்சியளிக்கும் 'ஆனந்தம்' என்கின்ற திட்டம், காவலர் ஆளிநர்கள் மேல் நிலுவையில் இருந்த இரண்டாயிரத்து 249 சிறு தண்டனைகள் ரத்து, இவைகள் எல்லாம் காவல்துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்னுடைய கவனத்திற்கு வந்த உடனே, அவர்களின் நலனுக்காக நம்முடைய அரசு செய்தது!

இப்படி, திராவிட மாடல் அரசின் காலம் தான், தமிழ்நாடு காவல்துறையின் பொற்காலமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

இப்படிப்பட்ட காலக்கட்டத்தில் தான் நீங்கள் இந்தப் படையில் இணைந்திருக்கிறீர்கள்! காவல்துறையைப் பொறுத்தவரை பொதுமக்களிடம் நெருக்கமாக இருக்கும் ஒரு துறை! அப்படிப்பட்ட துறையில் பணியாற்றவேண்டும் என்று நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்த இடம் உங்களுக்கு சுலபமாக கிடைத்துவிடவில்லை.

போலீஸ் ஆகவேண்டும்என்றகுறிக்கோளுடன் அதற்காக படித்து, கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு, தேர்வுகள் எழுதி, அதில் வெற்றி பெற்று, பல இலட்சம் பேர்களிலிருந்து, நீங்கள் மூன்றாயிரத்து 359 பேர், இன்றைக்கு இந்த இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

இதற்காக நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பீர்கள் என்று எனக்கு தெரியும்! அப்படிப்பட்ட உங்களுக்கும், உங்களுடைய இந்த வெற்றிக்கு துணை நின்ற குடும்பத்தினருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மனமார தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### சவால்களை எதிர்கொண்டு குற்றங்களைத் தடுக்க வேண்டும்!

உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது, கஷ்டப்பட்டு வந்திருக்கும் நீங்கள் மக்களுடைய கஷ்டங்களை தீர்க்க பாடுபடவேண்டும்! புதிதாக தமிழ்நாடு காவல்துறையில் இணைந்திருக்கும், உங்களுக்கு ஏராளமான கடமைகள் காத்திருக்கிறது. Law and Orderயை பாதுகாப்பதுடன் குற்றங்களே நடைபெறாமல் தடுப்பது தான் நம்முடைய இலக்காக இருக்கவேண்டும் என்று தொடர்ந்து நான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

## இந்தியாவிலேயே ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையாக சிறந்து விளங்கும் தமிழ்நாடு காவல்துறை!

> **உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது, கஷ்டப்பட்டு வந்திருக்கும் நீங்கள் மக்களுடைய கஷ்டங்களை தீர்க்க பாடுபட வேண்டும்! புதிதாக தமிழ்நாடு காவல்துறையில் இணைந்திருக்கும், உங்களுக்கு ஏராளமான கடமைகள் காத்திருக்கிறது. Law and Orderயை பாதுகாப்பதுடன் குற்றங்களே நடைபெறாமல் தடுப்பது தான் நம்முடைய இலக்காக இருக்கவேண்டும் என்று தொடர்ந்து நான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.**

நமக்கு முன்னால் இருக்கும் முக்கியமான சவால்கள் என்ன என்றால், சைபர் குற்றங்கள், போதைப் பொருள் ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்! இந்த சவால்களை எதிர்கொள்ள உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்! இந்தச் சமூகக் குற்றங்களை களைப்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு சமூக நோய்கள் உங்களை தாக்காமல் தற்காத்துக்கொள்வதும் முக்கியம்!

### புகார் தெரிவிக்கும் மக்களிடம் கனிவாகப் பேசுங்கள்!

உங்களுக்கு, சமூகநீதிப் பார்வையும் மதச்சார்பின்மையும் நிச்சயம் முக்கியம்! சாதி பாகுபாடு பார்க்கக் கூடாது! அனைவருக்கும் பொதுவான நிலையில் இருந்து நீங்கள் பணியாற்றவேண்டும்! உங்களுக்கு சட்டம்தான் முக்கியம்! பிரச்சினை என்று உங்களிடம் புகார் கொடுக்க வரும் பொதுமக்களிடம் கனிவாக பேசுங்கள். உங்களின் பேச்சும், நீங்கள் நடந்துக் கொள்வதிலும் தான், நம்முடைய பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு உருவாக்கும்!

உங்களுக்கு தெரியும். ஒரு மாநிலம் பாதுகாப்பானதாக இருந்தால் தான், தொழிற்சாலைகள் வரும். தொழில்கள் வந்தால் தான், வேலைவாய்ப்புகள் உருவாகும். வேலைவாய்ப்பு கிடைத்தால்தான், தங்களின் தேவைகள் நிறைவேறி மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள்! மக்களின் அந்த நிம்மதியை உறுதிப்படுத்த வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு உங்களிடம்தான் இருக்கிறது. அதைத்தான் நம்முடைய திராவிட மாடல் அரசும், இங்கு வந்திருக்கும் சங்கர் ஜிவால் தலைமையிலான காவல்படையும் செய்துகொண்டு இருக்கிறது. அதற்கு நீங்களும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### உயர் அதிகாரிகள் காவலர்களிடம் அரவணைப்போடு இருக்க வேண்டும்!

இங்கே காவல்துறை உயர் அதிகாரிகள் வந்திருக்கிறீர்கள். உங்களிடம் நான் எதிர்பார்ப்பது, உங்களின் Rank Seniority இதெல்லாம் பார்க்காமல், கடைநிலை காவலர்கள் வரை Friendlyயாக இருக்க வேண்டும்! ஒரு குடும்பமாக அன்போடும் அரவணைப்போடும் இருக்க வேண்டும்! இவர்களுக்கு உங்கள் மேல் பயம் இருக்கக் கூடாது! மரியாதைதான் இருக்கவேண்டும்! நிறைவாக, புதிதாக பணியில் சேரும் உங்களுக்கு, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, குற்றங்கள் குறைந்துவிட்டது என்று சொல்வது சாதனை இல்லை; குற்றங்களே இல்லை என்று சொல்வதுதான் சாதனை!

குற்றவாளிகளை கண்டுபிடித்து விட்டோம் என்று சொல்லிக்கொள்வது சாதனை இல்லை; குற்றங்கள் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்று சொல்வதுதான் நம்முடைய சாதனையாக இருக்கவேண்டும்!

காக்கிச் சட்டையைப் போடும் இன்றைக்கு அதற்கான உறுதியை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்! நீங்கள் பணியாற்றும் பகுதியில், குற்றங்கள் அனைத்தும் முழுமையாக தடுக்கப்பட்டது என்பது தான், உங்கள் Track Recordஆக இருக்கவேண்டும்! பொதுவாக ஒரு குற்றச்சாட்டை சொல்வார்கள். Dutyக்கு வரும் புதிதில்தான் Activeஆக இருப்பார்கள். ஆனால், காலப்போக்கில் சோர்ந்துவிடுவார்கள் என்று சொல்வார்கள். இன்றைக்கு பணியில் சேரும்போது உங்களிடம் இருக்கும் மிடுக்கும், போலீஸ் என்ற கம்பீரமும், Retired ஆகும் வரைக்கும் இருக்கவேண்டும்!

### உங்கள் உடல்நலனையும் பார்த்துக் கொள்ள வேண்டும்!

உங்கள் பேரை சொன்னாலே தமிழ்நாடே பெருமைப்படவேண்டும்! Personal ஆக உங்களுக்கு நான் ஒரு Advice தர விரும்புகிறேன்.

Dutyயை கவனிக்கும் அதே நேரத்தில், உங்கள் உடல் நலனையும், உள்ள நலனையும் தயவுசெய்து பார்த்துக்கொள்ளுங்கள்; குடும்பத்திற்காகவும் நேரம் செலவிடுங்கள். நவீன காலகட்டத்தில் ஏற்றதுபோல, தொழில்நுட்ப ரீதியாகவும் உங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்களிடம் நான் எதிர்பார்ப்பது, இன்றைக்கு பணிநியமன ஆணைகள் வாங்கும் நீங்கள், எதிர்காலத்தில் என்னிடம் Award வாங்கவேண்டும். அப்போது, இன்றைக்கு Appointment Order பெற்றுக் கொண்டதை நினைவுகூர்ந்து சொன்னீர்கள் என்றால், அதுதான், எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக அமைந்திட முடியும்!

அந்த நாள் வரும் என்ற நம்பிக்கையோடு உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பழைய மாமல்லபுரத்தில் – சாலை விபத்தில்

## உயிரிழந்த 5 பெண்களின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 29 -

செங்கல்பட்டு மாவட்டம், பையனூர் கிராமம், பழைய மாமல்லபுரம் சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், பழைய மாமல்லபுரம் சாலை, பையனூர் மதுரா பண்டிதமேடு சந்திப்பில் நேற்று முன்தினம் (27.11.2024) பிற்பகல் 02.20 மணியளவில் திருப்போரூர் வட்டம், பையனூர் கிராமம், பாளையத்தம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. ஆந்தாயி (வயது 71) க/பெ.முத்தன், திருமதி.லோகம்மாள் (வயது 56) க/பெ.சின்ராஜ், திருமதி.யசோதா (வயது 54) க/பெ.கோவிந்தசாமி, திருமதி. விஜயா (வயது 53) க/பெ.சாமிநாதன் மற்றும் திருமதி.கௌரி (வயது 52) க/பெ.குப்பன் ஆகிய 5 பெண்கள் சாலையோரத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது திருப்போரூரிலிருந்து மாமல்லபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த TN11 J 7270 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் மேற்குறிப்பிட்ட 5 பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப த்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



புதுடெல்லியில் 26.11.2024 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பிரகடனம் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 விழாவில், இந்திய அளவில் சிறந்த வங்கி சேவைக்கான விருதினை தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்சா அவர்கள் வழங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின் போது கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன், தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கி,கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் லோகநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் நேரில் வழங்கினார்!

## மறைமலை அடிகளாரின் பேத்திக்கு புதிய வீடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ.29–

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி.லலிதா அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அய்யனார் கோயிலில் புதிய வீட்டினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வல்லம் அய்யனார் கோயில் பேஸ்–1 திட்டத்தின்படி ரூ.8,23,000/– மதிப்பிலான K–5 எண்ணுள்ள வீட்டை கட்டணம் ஏதுமின்றி தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி. லலிதா அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இதுகுறித்து அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்த போது,

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சியரிடம் வீடு வழங்க கோரி கொடுத்த மனுவின்பேரில் மணிக்கணக்கில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு முதலமைச்சர் அவர்கள் வீடு வழங்க உத்தரவிட்டதின்பேரில், தமிழுக்காக தொண்டாற்றிய மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி.லலிதா அவர்களுக்கு இன்று வீடு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

வீடு வழங்கப்பெற்ற திருமதி. லலிதா தெரிவித்தபோது மறைமலை அடிகளாரின் பேத்தியாகிய எனக்கு எனது குடும்ப நிலை அறிந்து உடனடியாக வீடு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். மு.பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. ஆர்.உஷா புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தஞ்சாவூர் மாவட்டம் கீழவாசல் டபீர்குளம் பகுதியில் வசித்து வரும் தமிழறிஞரும், தமிழ் ஆய்வாளரும், தமிழ்த் தந்தை என்று போற்றப்படும் மறைமலை அடிகளார் அவர்களின் பேத்தி திருமதி.லலிதா அவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீட்டிற்கான ஆணையினை நேற்று முன்தினம் (27.11.2024) வழங்கினார். மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.